*1995 நவம்பர் 9]*

**72—**

## பெருங்களூரில் பிற்பட்டோர் நல விடுதி திறத்தல்

***25497**—திரு. சி. சுவாமிநாதன்:*

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்களூரில் புதியதாக பிற்பட்டோர் நல விடுதி திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்:***

புதுக்கோட்டை ஒன்றியம் பெருங்களூரில் புதியதாக பிற்பட்டோர் நல விடுதி திறக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**77—**

## பழுதடைந்த சாலையைப் புதுப்பிக்கும் திட்டம்

***11109**—திரு. நா.சா. பழனிசாமி:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி-பாலக்காடு சாலையில் ராமபட்டினம் பிரிவிலிருந்து தெற்கே நாதகவுண்டன்புதூர் வழியாக திம்மங்குத்து வரை செல்லும் மிகவும் பழுதடைந்த சாலையைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்டுள்ள சாலைப் பணி பஸ்கள் செல்லும் சாலைகள் பராமரிக்கும் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகிறது.